[31st October 1962

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: காண்டலா என்ற சமுதாயமும் தேவகாண்டலா என்ற சமுதாயம் ஒன்ருக இருக்கின்றன. காண்டலா என்ற சமுதாயத்தை பாக்வேர்ட் கிளாஸில் வைத்திருப்பதால் தேவகாண்டலா சமுதாயத்தையும் பாக்வேர்ட் லிஸ்டில் வைக்க அரசாங்கம் முன்வருமா? இந்தச் சமுதாயம் குறைவான ஜனத்தொகை கொண்டுள்ளதால் இந்தச் சலுகையை இந்தச் சமுதாயத்திற்கும் நீடிக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. பூ. கக்கன்: பாக்வேர்ட் கம்யூனிட்டீஸ் லிஸ்ட் பற்றி பரிசிலனே செய்து முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. பல பேர்கள் 'எங்களைச் சேருங்கள், எங்களைச் சேருங்கள்' என்று வற்புறுத்தி வருகிருர்கள். அரசாங்கம் இனிமேல் அப்படிச் செய்வதற்கில்லை என்று முடிவு எடுத்திருக்கிறது.

சமூக நல ஊழியர்கள்

* **1010-கே. கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து யூனியனில் உள்ள சமூக நல ஊழியர்களின் வேலைகள் என்ன?

(இ) அவர்கள் எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிருர்கள்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) The duties of the Social Welfare Workers are

(i) To assist the Social Education Organisers in implementing the Community Development Programme; and

(ii) To attend to propaganda in respect of Harijan Uplift, Prohibition and Publicity for the Five-Year Plans.

(b) Political sufferers and members of their families alone are eligible for appointment to the post. No educational qualification has been prescribed for the post. Only people with good general knowledge about the Community Development Programme and the nation building activities and with rural bias and capacity to do propaganda are selected for the post.

திரு. கரு. சீமைச்சாமி: பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள இந்தச் சமூக நல ஊழியர்கள் காங்கிரஸ் கட்சிக்காகப் பிரசாரம் செய்கிருர்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரிய வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அம்மாதிரி அரசாங்கத்தினிடம் தகவல் ஒன்றுமில்லை. கனம் அங்கத்தினர் அவர்களுக்கு ஏதாவது புகார் இருந்தால் அதை எழுதி அனுப்பலாம்.

* 1010-L Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that the posts of Social Welfare Workers in the Block Development Offices are created for giving employment to the Political sufferers; and